பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 07 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்துவதில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கு பாராட்டத்தக்கது என்று ஈரான் அதிபர் மசூத் பெஷஷ்கியான் தெரிவித்துள்ளார்.

**2.** இந்தியா - கிரீஸ் இடையே பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் நல்லுறவு வலுப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**3.** ஜப்பான் பிரதமர் **Sanae Takaichi** மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**4.** தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இம்மாதத்தில் இயல்பான மழைப்பொழிவு பதிவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** பெல்ஜியத்தில் நடைபெற உள்ள **21** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஹாக்கி தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பங்கு பாராட்டத்தக்கது என்று ஈரான் அதிபர் மசூத் பெஷஷ்கியான் தெரிவித்துள்ளார்.

ஈரான் அதிபருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது மேற்காசியாவில் நிலவும் தற்போதைய சூழல் குறித்து பிரதமரிடம் ஈரான் அதிபர் எடுத்துக் கூறினார்.

அமைதி ஏற்படுவதற்கான புரிந்துணர்வு எட்டப்பட்டிருப்பதை இந்த பேச்சின்போது வரவேற்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி, அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மற்றும் ராஜ்ஜிய ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் கப்பல் போக்குவரத்து ஹோர்முஸ் நீரிணை வழியாக தடையின்றி செல்வதன் முக்கியத்துவத்தையும் ஈரான் அதிபரிடம் தாம் வலியுறுத்தியதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - கிரீஸ் நாடுகளுக்கிடையே பொருளாதாரம், நிதிச் சேவைகள் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சருடன் ஆலோசனை நடத்தியதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

கிரீஸ் சென்றுள்ள அவர், அந்நாட்டு பொருளாதாரத்துறை அமைச்சர் Kyriakos Pierrakakis-ஐ சந்தித்துப் பேசினார்.

டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் பரஸ்பர நல்லுறவு வலுப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இரு நாடுகளின் வர்த்தக நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கு வழிவகை செய்வது குறித்தும் ஆலோசனை மேற்கொண்டதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பெட்ரோ கெமிக்கல் தயாரிப்புகளுக்கான சுங்கவரி விலக்கு வரும் 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேற்காசியாவில் நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு உலக அளவிலான வினியோக வழங்கலில் ஏற்பட்ட இடையூறுகளை தொடர்ந்து தற்காலிக நிவாரணமாக ஜூன் **30**ஆம் தேதி வரை பெட்ரோ கெமிக்கல் உற்பத்திப் பொருட்களுக்கு முழு சுங்கவரி விலக்கை மத்திய அரசு அறிவித்திருந்தது.

உள்நாட்டுச் சந்தையில் பெட்ரோ கெமிக்கல் பொருட்களின் போதிய இருப்பை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தற்போது நிலைமை படிப்படியாக சீரடைந்து வருவதால் சம்பந்தப்பட்ட பெட்ரோலிய வேதிப்பொருள் துறையில் சுமூகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக வரிவிலக்கு நீட்டிக்கப்படுவதாக மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

தான்சானியா கடல் பகுதியில் அமைந்துள்ள **Zanzibar**-ன் வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு பாராட்டத்தக்கது என்று அந்நாட்டு அதிபர் **Hussein Ali Mwinyi** தெரிவித்துள்ளார்.

**Zanzibar**-ல் அந்நாட்டு அதிபரை தான்சானியாவுக்கான இந்திய தூதர் **Vishwadip Dey** சந்தித்துப் பேசினார்.

இந்தியாவின் முதலீடு மற்றும் மேம்பாட்டுப் பணிகள், தொழிற்பயிற்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள், தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது என்று தான்சானியா அதிபர் தெரிவித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் நாடு முழுவதும் இன்று அமலுக்கு வருகிறது.

நாட்டின் கிராமப்புறங்களில் ஒவ்வொரு நிதியாண்டிலும் 125 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.

கிராப்புறப் பகுதிகளை வலுப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தை செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஊரகப் பகுதிகளில் 100 நாட்கள் வேலை வழங்கும் ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்திற்கு மாற்றாக, 125 நாட்கள்

வேலைவாய்ப்பை உறுதி செய்வதை இந்தப் புதிய சட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.

கிராமப்புற வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கவும், வருவாய் பாதுகாப்பை உறுதி செய்யவும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும் உதவும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின்கீழ் ஊதியத்தை உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஆண்டுதோறும் நடைபெறும் அமர்நாத் புனித யாத்திரை ஜம்மு-கஷ்மீரில் நாளை தொடங்குகிறது.

ஜம்முவின் பகவதி நகர் முகாமில் இருந்து முதலாவது குழுவினர் புறப்பட உள்ளனர்.

அமர்நாத் புனித யாத்திரையை ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநரும், அமர்நாத் குகைக்கோயில் வாரிய தலைவருமான திரு. மனோஜ் சின்ஹா நாளை அதிகாலை யாத்திரையை கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

**57** நாட்கள் நடைபெற உள்ள இந்த யாத்திரையை ஒட்டி ஜம்மு-கஷ்மீர் மற்றும் யாத்ரீகர்கள் தங்கியுள்ள முகாம்களில் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆந்திர மாநில மத்தியப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொள்கிறார்.

அனந்தபுரம் மாவட்டம் **Jantuluru-**வில் உள்ள மத்திய பல்கலைக்கழக மாணவர்கள் ஆயிரத்து **268** பேர் தங்களின் பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ளனர்.

அவர்களில் **56** மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களையும், பட்டங்களையும் குடியரசுத்தலைவர் வழங்கி உரையாற்ற உள்ளார்.

கடந்த **2018**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகத்தில் **18** முதுநிலை மற்றும் **9** இளநிலை பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும் ஆராய்ச்சிப் படிப்புகளிலும் மாணவர்கள் தங்களின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

<<<<>>>>

ஜப்பான் பிரதமர் **Sanae Takaichi** மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**16**வது இந்தியா - ஜப்பான் ஆண்டு உச்சிமாநாட்டில் அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பங்கேற்கிறார்.

ஜப்பான் பிரதமராக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக அவர் இன்று மாலை புதுதில்லி வர இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அவருடைய இந்தப் பயணம், இந்தியா - ஜப்பான் இடையேயான இருதரப்பு நல்லுறவுகளை வலுப்படுத்துவதுடன் பரஸ்பரம் மண்டல மற்றும் உலக அளவிலான விவகாரங்கள் குறித்த கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கு வழிவகை செய்யும் என்று வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நாளை ஜப்பான் பிரதமருக்கு பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

பேச்சுகளின் நிறைவாக இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இம்மாதத்தில் இயல்பான மழை பொழிவு பதிவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகள் மற்றும் அதனையொட்டிய மேற்கு மாவட்டங்களில் இயல்பைவிட அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

ஒருசில இடங்களில் இயல்பைவிட குறைவான மழைப்பொழிவு பதிவாகக் கூடும் என்றும், இதன் காரணமாக வேளாண்மை மற்றும் அணைகளில் நீரை தேக்கி வைப்பதற்கு சாதகமான சூழல் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த மையம் அதில் கூறியுள்ளது.

இதனிடையே வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களிலும்,

புதுச்சேரியிலும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

வெனிசுலாவில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

வெனிசுலா தலைவர் கராகஸ் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை அடுத்தடுத்து ஏற்பட்ட 2 சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் ஏராளமான கட்டிடங்கள் சரிந்து விழுந்தன.

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை ஆயிரத்து தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும், காயமடைந்தவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பெல்ஜியத்தில் வரும் 5ஆம் தேதி தொடங்க உள்ள 21 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஹாக்கி தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Anmol Ekka தலைமையிலான அணியில் 22 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள ஆசியக் கோப்பை இளையோர் ஹாக்கி தொடருக்கான ஆயத்தமாக இந்த போட்டிகள் அமையும்.

----------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

Chester-Le Street-ல் இந்திய நேரப்படி இரவு 10 மணிக்கு இப்போட்டி தொடங்கும்.

இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

**<<<<The End>>>>**